# மாதர்மனோரஞ்சினி.


| VOL I. | MADRAS, JUNE 1899. | No. 4. |
|---|---|---|
| புத்த. I. | சென்னப்பட்டணம்: 1899௵ ஜூன்௴ | இல. ௪. |


## சுந்தரவல்லி மரகதவல்லி சரித்திரம்.

(முன்தொடர்ச்சி.)

அவர்கள் இவ்வாறு சுரங்கத்தி னுள்ளே சென்றபொழுது பனிரெண்டு படிக்கட்டுகள் காணப்பட்டன. அவற்றைக் கடந்து கீழே சென்றவுடன் வெறுந்தரையாக விருந்தது. அத்தரைமார்க்கமாக ஒருவரையொருவர் கைபிடித்துக்கொண்டு மனதிலச்சமும் வெளிக்குத்தைரியமுங்கொண்டு போகத்தொடங்கினார்கள். செல்லச் செல்ல வழிமாளவில்லை. அவ்விடத்திற் காற்றேகிடையாது மூச்சுவிடவும் கஷ்டமாயிருந்தது. விளக்கவிந்தது. தங்களிருப்பிடத்தைவிட்டு வந்ததையும் வேலைக்காரன்சொல்லிய அரசன்கட்டளைக்குமாறாகநடந்ததையும் அதினால்படுங்கஷ்டங்களையும் நினைத்திருவரும் கண்ணீர்விட்டு கருணாநிதி காப்பாற்றுவாய் தேவ தேவே யிந்தசமயத்தில் சிறியோர்களைக் காக்காவிடில் என்னசெய்வோம் என்று பிரலாபித்துச் செல்லுகையில் எதிரே ஒருகதவு தட்டுப்பட்டது. இவர்கள் போனவேகத்தினால் அக்கதவு தானேதிறந்தது. அங்கேசில படிகளிருப்பதைத் தெரிந்து மேலே ஏறத்தொடங்குகையில் முன்போல பன்னிரண்டு படிக்கட்டுகளில்லாமல் ஐந்தேபடிகட்டுகளிருந்தன. அவைகளைக்கடந்து சென்றவுடன் ஒருசிறிய மாளிகையின் ஓர் அறைக்குக்கொண்டுபோய்விட அங்கே அருகிலிருந்த ஓர்கூடத்தில் சோபாயொன்றின் மேல் படுத்திருக்கும்பதின்மூன்றுவயதுள்ள தங்கப்பதுமையைப்போன்றவுருவமைந்த ஒருமாதரசையும் அம்மாதினருகில்நின்று அதிகசல்லாபத்தோடு அவளழகை வர்ணித்துக் கொண்டிருந்த மன்மதனைப்போன்றவோர்சிறுவனையும் கண்டார்கள். அழகுவாய்ந்த சிறியோன் அவ்விடத்தில் வீற்றிருந்த அரிவையை நோக்கி வர்ணித்த பாடல் இவ்விரண்டுவீரர்கள் காதுகளில் கேட்டதாவது:—

சிங்காரபத்தியம். இராகம் - ஆநந்தபைரவி.

திகழுமே னகையோ திவ்விய ரம்பையோ
தேவியோ விலங்குசீர் வச்சிராங்கி
அகலிகை யுருவமோ அழகு வாணியோ
வமர்ந்தெ னெதிர்படுத்த சாமளாங்கி
சகம்புக ழூர்வசியோ சந்திர மதியோ
தமயந்தியோ வீற்றிருக்குங் கோமளாங்கி
புகழ்பெறு சீதையோ புண்ணிய வுருவமோ
புன்னகையோ டென்னையழைத்த மோகனாங்கி.

என்றிவ்வாறு அம்மாதரசின் புகழையெடுத்தோதுகின்ற தம்மைப் போலொத்த சிறியோனைக்காணுங்கால் அவர்களுக்குண்டாகிய அச்சமும் அச்சிறியோனுக் குண்டாகிய நாணமும் சொல்லமுடியாது. தம்மைக் கண்டவுடன் என்னசெய்வார்களோ என்கின்ற பயமும் அவன் சிங்கார பத்தியத்தினால புகழ்ந்ததைக்கேட்ட இரண்டுவீரர்க ளென்னநினைக்கின் றனரோ என்னும் நாணமும் மூவர்களுக்குண்டாயின. இதையெல்லாம் படுத்தவண்ணம் தெரிந்துகொண்ட பத்மாசனி யென்னும் மாதரசானவள் தன்னருகில் தொங்கவிட்டிருக்கும் கயிற்றினை யசைக்கவே அதிகதூரத் தில் மணியடித்த ஓசையைக்கேட்ட தோழியொருத்தி யோடிவர அவளை நோக்கி காவற்காரர்களிருவரையு மழைத்துவரக்கட்டளையிட்டாள். சற்று நேரத்திற்குள் காவற்காரர்களாகிய சிப்பாய்களிருவரு மங்கு வந்தவுடன் அவர்களுக்கு கண்சாடை காட்டித் தன்மாளிகையிலுத்தரவின்றி வந்த இரண்டு வீரர்களாகிய ஞானசிகாமணி, விவேகசிந்தாமணி யிருவரையும் சிறையிலடைக்கும்படி பத்மாசனி யுத்திரவு செய்தாள்.

## ௪-ம் அத்தியாயம்.

---

தனதருமைப் புதல்விகள் காணாமற்போன சங்கதியைக் கேட்டது முதல் பத்மசீல மகாராஜனுக் குண்டாகிய துக்கத்திற்களவில்லை. இரவு முழுதுந் தூக்கமில்லாமற் படுக்கையிற்புரண்டு தானொருமருங்கும் அரசி யாகிய ஆநந்தவல்லி யொருமருங்கும் அழுதுக்கொண்டே யிருந்தார்கள். பொழுதுவிடிந்தவுடன் அமைச்சனும் கவிராசனுமங்குவர அவர்கள் செய் தவுபசாரத்தினால் அரசன் சற்றுத்தேறுதலடைந்து இராச்சியவிஷயமாய்ப் பார்க்கவேண்டிய காரியங்களில் தன்மனதைச் செலுத்தினான்.

இஃதிங்ஙனமிருக்க அரசனாலேவப்பட்ட மகாராஷ்டிய வீரர்களா கிய வெங்கோபராவ், வீமராவ் என்பவர்கள் அரசனது கட்டளையை சிர

சின்மீது தாங்கித் தங்களில்லத்திற்குச் சென்று தம்மனையாட்டி கட்குத் தங்கள்குறைகளைச் சொல்லி முறையிட்டு மூன்றுதினங்களுக்குள் அப்பெண்க ளிருவரையும் கொண்டுவராவிடில் எங்கள் உயிர்தங்காது. ஆகையால் உடனே புறப்பட்டுக் குதிரைகளின்மீதூர்ந்து நான்கு திக்குகளிலுமோடி எங்கேபோனார்களோ அந்த இடத்தைநாடியவர்களைக்கொண்டுவர முயற்சி செய்வோம் அப்படிக்கொண்டுவராவிடில் உயிர்போவதுநிச்சயமே. ஆகையினால் நீங்கள் மனம்வாடாமல் ஈசுவரத்தியானமாக இருந்து எமதுயிர் தப்பும்படி கோரவேண்டியதென்று தம்மனையாட்குச் சொல்ல அவ்வசனத்தைக் கேட்ட பத்தினிகளாகிய துளசிபாய், இராதாபாய் என்னும் கற்புடைமகளிர் கலங்கி கண்ணீர்விட்டுப் பிரலாபித்து என்ன செய்வோம் ஏதுசெய்வோம் எங்களுக்கு திக்குவேறேது. அப்படியேதாவது கெடுதிநேரிடும் பக்ஷத்தில் நாங்களும் எம்முயிரை மாய்த்துக்கொள்ளுவோம் என்றழத்தொடங்கினார்கள். உடனே யிருவர்களும் காலதாமதமாகின்றது, அரசன்கேட்டால் இப்போது உடனே தண்டித்துவிடுவான். போகவிடை தாருங்களென்று மனம் வராமற்பிரிந்து இரண்டு குதிரைகளைச் சோதித்து அவற்றின்மே லேறினார்கள். எந்தப்பக்கஞ் செ[illegible]கிறதென்று தெரியாமல் மனங்கலங்கி அவ்வூர்ப் பெரிய ஜோ[illegible]யகிய குமாரதேசிகனிடத்திற் சென்று ஐயா நாங்கள் காணாத இரண்டு [illegible]ருள்களைப்பற்றி உமதிடத்தில் வந்தோம் அப்பொருள்க ளெங்குள்ளவை எமது கரங்களிற்சிக்குமா அவை சிக்காவிடின் எமதுயிர்களுக்கு ஹா[illegible] வருமா என்றவனுக்குக் காணிக்கை கொடுத்துக் கேட்குமளவில்,

குமாரதேசிகனென்னும் ஜோசியன் தனக்குத்தெரிந்த ஜோதிட நூல்களையெல்லாம் எடுத்துப்போட்டு ஆராயுமளவில் பலவித எண்ணங்கள் தோன்றின. ஆயினுமிக்காரியம் இராஜவிஷயத்தைப்பற்றிய காரியமாயிருக்கின்றதென்றும் காணாமற்போன பொருள்கள் உயிருள்ளனவென்றும் அப்பொருள்கள் எட்டுநாளி லகப்படுமென்றும் அதினால் உயிர்க்கு கஷ்டங்கள் நேரிட்டபோதிலும் முடிவில் உயிர்போகாமலே தப்புவீர்களென்று தகுந்த ஜோஸ்யம் சொன்னான். மேலும் போனபொருள்கள் வடகீழ்த்திசை மார்க்கமாக யிருப்பனவால் நீங்களத்திக்கை நோக்கிச் செல்லுவதினால் பலனுண்டு என்றுமுடித்தான்.

அச்சோசியனது வார்த்தையை மீறாமல் வடகிழ்த்திசையைநோக்கி சுமார் ௮-மைல் வரைக்கும் வழியில் நிற்காமலும் ஒருவருடன் வீண்வார்த்தையாடாமலும் தங்கள் அசுவங்களை வாயுவேகமனோவேகமாக நடத்திக் கடைசியில் மல்லன்பாளைய மென்னுமொரு ஊருக்கருகில்வந்து அங்கேயிருந்த ஓர் காளிகோயிலிற் றங்கினார்கள். அந்தக்கோயிலின்கதவுகளோர்

சிங்காரபத்தியம். இராகம் - ஆநந்தபைரவி.

திகழுமே னகையோ திவ்விய ரம்பையோ
தேவியோ விலங்குசீர் வச்சிராங்கி
அகலிகை யுருவமோ அழகு வாணியோ
வமர்ந்தெ னெதிர்படுத்த சாமளாங்கி
சகப்புக ழூர்வசியோ சந்திர மதியோ
தமயந்தியோ விற்றிருக்குங் கோமளாங்கி
புகழ்பெறு சீதையோ புண்ணிய வுருவமோ
புன்னகையோ டென்னையழைத்த மோகனாங்கி.

என்றிவ்வாறு அம்மாதரசின் புகழையெடுத்தோதுகின்ற தம்மைப் போலொத்த சிறியோனைக்காணுங்கால் அவர்களுக்குண்டாகிய அச்சமும் அச்சிறியோனுக் குண்டாகிய நாணமும் சொல்லமுடியாது. தம்மைக் கண்டவுடன் என்னசெய்வார்களோ என்கின்ற பயமும் அவன் சிங்கார பத்தியத்தினால புகழ்ந்ததைக்கேட்ட இரண்டுவீரர்க ளென்னநினைக்கின் றாளோ என்னும் நாணமும் மூவர்களுக்குண்டாயின. இதையெல்லாம் படுத்தவண்ணம் தெரிந்துகொண்ட பத்மாசனி யென்னும் மாதரசானவள் தன்னருகில் தொங்கவிட்டிருக்கும் கயிற்றினை யசைக்கவே அதிகதூரத் தில் மணியடித்த ஓசையைக்கேட்ட தோழியொருத்தி யோடிவர அவளை நோக்கி காவற்காரர்களிருவரையு மழைத்துவரக்கட்டளையிட்டாள். சற்று நேரத்திற்குள் காவற்காரர்களாகிய சிப்பாய்களிருவரு மங்கு வந்தவுடன் அவர்களுக்கு கண்சாடை காட்டித் தன்மாளிகையிலுத்தரவின்றி வந்த இரண்டு வீரர்களாகிய ஞானசிகாமணி, விவேகசிந்தாமணி யிருவரையும் சிறையிலடைக்கும்படி பத்மாசனி யுத்திரவு செய்தாள்.

## ௬-ம் அத்தியாயம்.

---

தனதருமைப் புதல்விகள் காணாமற்போன சங்கதியைக் கேட்டது முதல் பத்மசீல மகாராஜனுக் குண்டாகிய துக்கத்திற்களவில்லை. இரவு முழுதுந் தூக்கமில்லாமற் படுக்கையிற்புரண்டு தானொருமருங்கும் அரசி யாகிய ஆநந்தவல்லி யொருமருங்கும் அழுதுக்கொண்டே யிருந்தார்கள். பொழுதுவிடிந்தவுடன் அமைச்சனும் கவிராசனுமங்குவர அவர்கள் செய் தவுபசாரத்தினால் அரசன் சற்றுத்தேறுதலடைந்து இராச்சியவிஷயமாய்ப் பார்க்கவேண்டிய காரியங்களில் தன்மனதைச் செலுத்தினான்.

இஃதிங்ஙனமிருக்க அரசனாலேவப்பட்ட மகாராஷ்டிய வீரர்களா கிய வெங்கோபராவ், வீமராவ் என்பவர்கள் அரசனது கட்டளையை சிர

சின்மீது தாங்கித் தங்களில்லத்திற்குச் சென்று தம்மனையாட்டி கட்குத் தங்கள்குறைகளைச் சொல்லி முறையிட்டு மூன்றுதினங்களுக்குள் அப்பெண்க ளிருவரையும் கொண்டுவராவிடில் எங்கள் உயிர்தங்காது. ஆகையால் உடனே புறப்பட்டுக் குதிரைகளின்மீதூர்ந்து நான்கு திக்குகளிலுமோடி எங்கேபோனார்களோ அந்த இடத்தைநாடியவர்களைக்கொண்டுவர முயற்சி செய்வோம் அப்படிக்கொண்டுவராவிடில் உயிர்போவதுநிச்சயமே. ஆகையினால் நீங்கள் மனம்வாடாமல் ஈசுவரத்தியானமாக இருந்து எமதுயிர் தப்பும்படி கோரவேண்டியதென்று தம்மனையாட்குச் சொல்ல அவ்வசனத்தைக் கேட்ட பத்தினிகளாகிய துளசிபாய், இராதாபாய் என்னும் கற்புடைமகளிர் கலங்கி கண்ணீர்விட்டுப் பிரலாபித்து என்ன செய்வோம் ஏதுசெய்வோம் எங்களுக்கு திக்குவேறேது. அப்படியேதாவது கெடுதிநேரிடும் பக்ஷத்தில் நாங்களும் எம்முயிரை மாய்த்துக்கொள்ளுவோம் என்றழத்தொடங்கினார்கள். உடனே யிருவர்களும் காலதாமதமாகின்றது, அரசன்கேட்டால் இப்போது உடனே தண்டித்துவிடுவான். போகவிடை தாருங்களென்று மனம் வராமற்பிரிந்து இரண்டு குதிரைகளைச் சோடித்து அவற்றின்மேலேறினார்கள். எந்தப்பக்கஞ் செல்லுகிறதென்று தெரியாமல் மனங்கலங்கி அவ்வூர்ப் பெரிய ஜோசியனா கிய குமாரதேசிகனிடத்திற் சென்று ஐயா நாங்கள் காணாத இரண்டு ருள்களைப்பற்றி உமதிடத்தில் வந்தோம் அப்பொருள்க ளெங்குள் எமது கரங்களிற்சிக்குமா அவை சிக்காவிடின் எமதுயிர்களுக்கு ஹா வருமா என்றவனுக்குக் காணிக்கை கொடுத்துக் கேட்குமளவில்,

குமாரதேசிகனென்னும் ஜோசியன் தனக்குத்தெரிந்த ஜோதிடநூல்களையெல்லாம் எடுத்துப்போட்டு ஆராயுமளவில் பலவித எண்ணங்கள் தோன்றின. ஆயினுமிக்காரியம் இராஜவிஷயத்தைப்பற்றிய காரியமாயிருக்கின்றதென்றும் காணாமற்போன பொருள்கள் உயிருள்ளனவென்றும் அப்பொருள்கள் எட்டுநாளி லகப்படுமென்றும் அதினால் உயிர்க்கு கஷ்டங்கள் நேரிட்டபோதிலும் முடிவில் உயிர்போகாமலே தப்புவீர்களென்று தகுந்த ஜோஸ்யம் சொன்னான். மேலும் போனபொருள்கள் வடகீழ்த்திசை மார்க்கமாக யிருப்பனவால் நீங்களத்திக்கை நோக்கிச் செல்லுவதினால் பலனுண்டு என்றுமுடித்தான்.

அச்சோசியனது வார்த்தையை மீறாமல் வடகீழ்த்திசையைநோக்கி சுமார் 8-மைல் வரைக்கும் வழியில் நிற்காமலும் ஒருவருடன் வீண்வார்த்தையாடாமலும் தங்கள் அசுவங்களை வாயுவேகமனோவேகமாகநடத்திக் கடைசியில் மல்லன்பாளைய மென்னுமொரு ஊருக்கருகில்வந்து அங்கேயிருந்த ஓர் காளிகோயிலிற் றங்கினார்கள். அந்தக்கோயிலின்கதவுகளை

மூடப்பட்டிருந்தன. வெளியே இரண்டு பெருந்திண்ணைகள் மாத்திரமிருந்தபடியால் அங்கேதங்கி குதிரைகளை ஓர்மரத்திற் கட்டிவிட்டு உட்கார்ந்து யோசிக்கத் தொடங்கினார்கள். அண்ணே நாம்சற்று இளைப்பாறினவுடன் இங்கு கடைவைத்திருக்கும் கோமட்டியை விசாரித்து யேதாகிலும் சங்கதி வெளிப்படுகிறதா பார்ப்போம் என்று வெங்கோபாராவ் சொல்ல அதைக்கேட்ட வீமராவ் சொல்லுவான்.

இந்தக்கோயில் மூடியிருக்கிறவயணந் தெரியவில்லை வெளிப்பூட்டில்லாமல் உட்பூட்டுப்போட்டிருக்கிறதே. நாற்புறமும் பிரிகின்ற இடமாயிருப்பதால் ஏதோ விசித்திரமாயிருக்கும். இந்தக்கடை வைத்திருக்கும் கோமட்டியை யொன்றும் விசாரிக்க வேண்டியதில்லை ஊருக்குள்ளே போய் போசனஞ்செய்து மீள்வோமென்று யோசித்துச் சத்திரம் எங்கேயிருக்கிறதென்று விசாரித்து அங்கே அக்கிரார வீதியிலிருக்கும் அலமேலம்மாள் சத்திரத்துக் குள்ளேபோய் அம்மா இன்றைக்கு இரண்டு வழிப் போக்கர்களுக்கு போஜன மகப்படுமோவென்று கேட்க அலமேலம்மாள் அதிசீக்கிரத்தில் போஜனம் சமைத்துப்போட அதிக பசியோடிருந்ததினால் ஆவலுடன் உண்ணத்தலைப்பட்டார்கள். சாப்பிடும்போது சத்திரத் பார்ப்பினியை நோக்கி ஊரின்பேரும் அவ்வூரிலுள்ள ஏதாவது அதி ங்களும் செப்பும்படி வினயத்தோடு வேண்டுவதைக்கண்ட பிராமண திரீயானவள் அந்தவூர் மல்லன்பாளையம் என்றும் ஒருகாலத்தில் காளி யாடெதிர்த்து ஒருமல்லன் போராடுவதைக்கண்ட அந்த தேவதையானது மனமகிழ்ந்து வரந் தந்ததென்றும் அதுமுதல் அக்கோயிலின்கதவு சாத்தப்பட்டிருக்கின்றதென்றும் தெரிந்தமட்டும் சொன்னாள்.

இதைக்கேட்ட இரண்டு இராயர்களும் போஜனமுடித்துத் தங்கள் உடுப்புகளைக்கழற்றி மாறுவேடம்பூண்டு வெங்கோபாராவ் காளிகோயிலின் திண்ணைமீதும் வீமராவ் அக்கோமட்டி கடைவைக்கும் இடத்திற்கு எதிரேயுள்ள தோப்பிலும் படுத்துத் தூங்காது விழித்திருந்தார்கள். இராஜன் விதித்த மூன்றுநாளில் ஒருநாள் இங்கேயே போய்விட்டது தாங்கள்கோரிவந்தகாரியத்தை மறந்துவிட்டார்கள். மல்லன்பாளையத்தில் தங்கவேண்டிய அவசியமென்ன காளிகோயில் சாத்தியிருந்தால் என்ன திறந்திருந்தாலென்ன தங்களுக்கு யிட்டவேலையை பயத்தோடு செய்துமுடிப்போமென்னும் எண்ணமிருந்ததா சொஞ்சமேனுமில்லையே இந்தமல்லன்பாளையத்தில் தங்காமல் நேரே போயிருந்தால் காணாதபெண்களகப்பட்டாலும் அகப்படுமே. யாருக்கும் அநுபவித்தால்தான் தெரியும் கஷ்டம். ஜோசியன் சொன்னபடியே நடக்கும். நமதுயிர் போகப்போகிறதில்லை வந்த கஷ்டங்களை நாமேதாம் அனுபவிக்கப் போகிறோம். வருவது தானே

வரும். இன்னமிரண்டு தினங்களிருக்கின்றனவே அந்ததினங்களில் பகலிரவாகச்சுற்றிப் பார்ப்போமென்கிற தைரியங்கொண்டு ஒருராத்திரியாவது இங்கே கழிக்கலாமென் றெண்ணங்கொண்டதாகத் தெரிகின்றது.

மேற்கூறிய விதமாக இருவரும் மாறுவேடம்பூண்டு என்ன விபரீதங்கள் நடக்கின்றனவோ என்று பார்க்கையில் சுமார் நடுராத்திரியில் மேற்றிசையிலிருந்து ஒருவன் வண்ணான் மூட்டையைக் கழுத்திற் கட்டியது போல் கட்டிக்கொண்டு கோமட்டி கடையினிடம் வந்தான். அவனைப் பார்த்தவுடன் கடைவைத்திருந்த செட்டியானவன் களிப்புடனழைத்து தன்கடையண்டை உட்காரவைத்து சற்றுநேரம்பேசினபிறகு கடைக்குளழைத்துச் சென்றான். போனமனிதன் வெளியேவரவில்லை. மறுபடியும்செட்டி தன்னிருப்பிடத்தில் வந்து கடையில் உட்கார்ந்தான். இன்னம் சிறிதுநேரத்திற்குள் கீழ்த்திசையிலிருந்தும் தென்திசையிலிருந்தும் ஒவ்வொருவராக இரண்டு வண்ணார்கள் தங்கள் மூட்டைகளை எடுத்துக்கொண்டு சேர்ந்தவுடன் அவர்களையும் முன்சொன்ன மாதிரியாகவே உள்ளே நுழையவிட்டான். போன இருவர்களும் மீண்டும்வெளிப்படவில்லை. சற்றுநேரத்திற்குள் கோமட்டி விளக்கவித்துக் கடைசாத்தப்போகிற தருணங்கண்டு எதிர்தோப்பில் படுத்திருந்த வீமராவ் என்பவன் சந்தடிசெய்யாமல் எழுந்துவந்து தான்போர்த்திருந்த வஸ்திரத்தினால் அவன் வாயையும் கைகளையும் கட்டி அந்தத்தோப்பில் உருளவிட்டு வேங்கோபராவையழைத்துக் கடைக்குள் நுழையவே அங்கேயொன்று மகப்படவில்லை. வெற்றிலையும் பாக்கும் புகையிலையுந்தவிர வேறுபொருள்கள் காணப்படவில்லை. இராத்திரி பனிரெண்டுமணி வரைக்கும் வெற்றிலைபாக்கு கடைதிறந்து வைத்திருக்கவேண்டிய அவசியமென்ன சில்லறை கடைக்காரனுக்கு இரவும் பகலும் விற்பனைசெய்தாலும் லாபம் வரும்படியிருந்தால் சரக்குகள் ஏராளமாகவைத்து வியாபாரஞ்செய்யலாம். பார்த்தால் சரக்கொன்றுமில்லை ஒருநாளைக்கெல்லாம் விற்றது மூன்றணாகாசின்மேல்கிடையாது. அக்கடைக்குள்ளே சென்றிருவரும் பரிசித்து நான்குதிக்கிலும் பார்க்கையில் அங்கேசுவரில் சிறுகதவொன்று காணப்பட்டது. ஆனால் அக்கதவு மூடப்பட்டிருந்ததால் அசைத்தசைத்துப் பார்த்தும் திறக்கவில்லை. சற்றுநேரம் மயங்கி கையினால் தடவிப் பார்க்குமளவில் அங்கேயொரு ஆணியொன்று தென்பட அதையழுத்தியவுடன் கதவுசந்தடியில்லாமல்திறந்தது. இருவரும் உள்ளேநுழைந்தார்கள் காளியினுடைய சந்நிதானமும் திருவோலக்கமண்டபமும் எதிரில்தோன்றின. அத்தேவியினது சந்நிதிக்குட்போயங்கேநின்ற ஆளிவாகனத்தின்பக்கலிலொருவனும் ஆனைவாகனத்தின்பக்கலில் மற்றொருவனுமாக மறைந்துக்கொண்டேநடக்கின்ற விசேஷங்களைக் கண் சிமிட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

உட்சென்ற மூவர்களும் தாங்கள் கொண்டுவந்தமூட்டைகளையவிழ்த்துக்கொட்டினார்கள். அந்த மூட்டைகளில் நவரத்னங்களாலிழைத்த விலையுயர்ந்தநகைகளும் ஆபரணங்களும் பட்டுப்புடவைகளும் காசிதுப்பட்டாக்களும் நிறைந்திருந்தன. மூன்றுபேர்கொண்டுவந்த வஸ்துக்களை ஒன்றாய் நகைகளை யொருமருங்கும் வஸ்திரங்களை யொருமருங்கும் வேறு வேறாகப்பிரித்துவைத்துக் கோமட்டிவரவை யெதிர்பார்த்திருந்தார்கள். செட்டி எப்படி வருவான். வாயையும் கைகால்களையும கட்டித்தோப்பில் எறியப்பட்டவன் எவ்விதமாகத் தன்கட்டுகளை யவிழ்த்துவருவான். சற்று நேரத்திற்குள் மூவரில் ஒருவன் கோமட்டியைத் தேடப்புறப்பட்டு அவன் வாகனங்களின் வழியாய்வர வெங்கோபராவ் என்பவன் பேசாது பின்தொடர்ந்து சந்நிதியின் வெளிப்புறத்திற் போகும்பொழுது தன்கையிலிருந்த சிறுகத்தியால் அவன்காலைவெட்டி யவனைத்தூக்கி யோர்பாழடைந்திருந்த ஓரிடத்தில் போட்டுவிட்டான். போனவனும் வாராமையினால் மிகுந்திருந்த இருவரில் ஒருவன் என்ன இரண்டுபேரையும் காணோமென்றுயோசித்துக்கொண்டு நான்குதிக்கிலும் பார்த்துப் பார்த்து அதிக அச்சத்துடன் வெளிவரவே யவனையுமவ்வாறே காலைவெட்டி கீழே நீட்டினான். கோமட்டிச்செட்டியோ தோப்பில் கட்டுண்டு நித்திரை செய்கிறான். இரண்டுவண்ணார்களும் கால்வெட்டுண்டு பாழறையிலுயிர்போகின்ற தருணமாயிருக்கின்றார்கள். காளிசந்நிதியில் ஒருவன்மாத்திர மிருந்திருக்கிறான். இரண்டு மகாராஷ்டிரரும் தங்கள் இடுப்பில் கட்டிவைத்திருந்த சிறுகத்திகளையுமுருவின பிரகாரம் காளிசந்நிதிக்குச் செல்லவே யங்கே உட்கார்ந்திருந்த வண்ணானைப்போல வேடந் தரித்த திருடனைக் கண்டார்கள். கண்டவுடன் அவனைநோக்கி யுண்மையை வெளிப்படுத்துகின்றாயா அல்லது உனனுடன் கூடவந்த இருவர்மாண்டதுபோல நீயு மாள்கின்றாயா? இதோவொரு வெட்டாகவே வெட்டிவிடுகின்றோமென்று பயமுறுத்தவே யவன் நிராயுதபாணியாக விருந்ததனால் ஒன்றும்சொல்லாமல் மதிமயங்கி யோரே நிலையாய் நின்றுவிட்டான். பின்பிருவரும் எங்களுக்குகாலம் வீணேபோகின்றது இன்றிரவு நீங்கள் எவ்விடத்தில் கொள்ளையடித்தீர்கள். இராஜன் புத்திரிகளாகிய இருவரையும் வழியில் கண்டதுண்டா எதிரில் அடுக்கிவைத்திருக்கும் வஸ்திரங்களைக் கண்டால் ராஜஸ்திரீகளணியத்தக்கனவாயிருக்கின்றனவே என்று சொல்லவே அவன் எவ்விதமாக யிந்தவீரர்களிடம் தப்புவதென்று யோசனை செய்துகொண்டிருந்தபடியால் மாறுத்தரமொன்றும் சொல்லவில்லை உடனே யிருவர்க்கும்கோபம் பிறந்தது அவனுடைய கால்களையும் கண்டித்துவிட்டார்கள். கால்கள் போனவுடன் அவனவ்விடத்தை விட்டுப்போகாமல் விழுந்துவிட்டான். இப்போதாவது உன்னுயிர்நீங்குமுன் எங்களுக்கு நீங்கள்செய்த சங்கதிக

ளைத் தெரிவிக்கிறாயா இல்லையா என்று பலமுறையும் வேண்டியும் ஒன்றும் சொல்லவில்லை இதற்குள் பொழுதுவிடிகின்ற சமயமாயிருந்தது. அவனையங்கேவிட்டு சந்நிதானந்தாண்டி பிரகாரம் வருவதாயெண்ணி யிருவரும் அங்கேயுள்ள மூலஸ்தானத்திலுள்ள காளியைப் பிரதக்ஷணஞ் செய்யப்போனார்கள்.

## ௫ம் அத்தியாயம்.

அகில நாயக னவற்குமே லிறைவனில்லை
யகில லோகமு மவன்றிரு வாணையினடக்கும்
யகில லோகமும் படைத்தளித் தழிப்பவனவனே
யகில நூல்களு முரைத்திடுந் துணிவதுவாமால்.

உலகத்திற்கு நாயகனாகிய இறைவன் ஒருவனே அவனுக்கு மேற்பட்டவஸ்து ஒன்றும்கிடையாது எல்லா உலகங்களுமவனுடைய ஆணையின்படி நடக்கும் எல்லா உலகத்தையும் படைத்துக்காத்து அழிக்கும் சக்தி அவனொருவனுக்கே யுள்ளது இந்தவுண்மையை எல்லா நூல்களும் முறையிடுகின்றன.

ஞானசிகாமணி விவேகசிந்தாமணி யிருவரும் சிறையிலடைப்பட்டதைச் சொன்னோமே அவர்களைச் சிறைவைத்த மாதுயார்? அவளருகில் நின்று அவளழகை வர்ணித்த புண்ணியபுருஷன் யார்? இவ்விரண்டு சிறுவீரர்களையும் ஏன் சிறைவைக்கவேண்டும்? இந்தவிஷயங்களைப்பற்றி சற்று விசாரிப்போம்.

(இன்னும் வரும்.)

பி. ஷண்முகசுந்தரம் பிள்ளை, பி. ஏ.

---

## அன்னபூரணி கதை.

(முன்தொடர்ச்சி.)

நிரக்ஷர குக்ஷியாகிய கமலம் மற்றப்பெண்கள் யாராவது புஸ்தகங்கள் வாசிக்கப்பார்த்தால் பொறாமைப்படுவாள். "தாசிகளல்லவோ மாப்பிள்ளைகளை மயக்குகிறதற்காக பாட்டுகள் படிக்கவும் சங்கீதம்பாடவும் எழுத வாசிக்கவும் பயிலுவார்கள். வீட்டுக்குடித்தனக்காறிக்கு இதுகளேதுக்கென்று பழிப்பாள்." தன்மாமியார் கண்ணாடி போட்டுக்கொண்டு தினந்தோறும் புஸ்தகங்கள் படிப்பதையும் பத்திரிகைகளை வாசிப்பதை

யும் பார்த்து எரிச்சல்பட்டு சாகப்போகிற கிழத்துக்கு இதொரு கேடாவென்று வாய்க்குள் முணு முணுத்துக்கொண்டு போவாள். மற்றவர்கள் படித்திருப்பதைப் பார்த்து பொறாமைப்பட்டு எரிச்சலடைந்தாலும், தான் படிக்கவேண்டுமென்கிற ஆவல் சற்றாவது கிடையாது. முத்தையபிள்ளை அடிக்கடி பிரயாசப்பட்டுப் பார்த்தாலும் அவரால் முடியவில்லை. அவளுடைய சரீரக்கண்கள் அழகும் தெளிவாயுமிருந்தும் ஞானக்கண்களாகிய அறிவின்கண்கள் அந்தகாரப்பட் டிருந்ததைப்பற்றி மதியிலியாயிருந்தாள். நம்தேசத்தவர்களான எத்தனையோ சகோதரிகள் கமலத்தைப் போலிருக்கிறார்கள். அவர்களுக்கு உடையின்பேரிலும் நகையின்பேரிலும் ஆசையேதவிர படிப்பைக்குறித்து சற்றாகிலும் கவலையில்லை. இவ்விஷயத்தில் ஐரோப்பிய ஸ்திரீகள் நமக்கு எவ்வளவோ சிறந்தநிதர்சனமாயிருக்கிறார்கள். மேலும் கமலத்துக்கு ஈஸ்வரன் ஒருவர் உண்டென்றாவது அவரை பஜிக்கவேண்டுமென்றாவது தெரியாது. தர்மமென்பது அவளிடத்தில்கிடையாது. யாராவது தர்மம் செய்கிறதைப்பார்த்தாலும் அவளுக்குப் பொறுக்காது. "கோவிலுக்கும் குளத்துக்கும்" போகிறதில்லை. தன்புருஷனாவது மாமியாராவது கோவிலுக்குப் போனால் அவர்களை பரியாசம்செய்து வேஷதாரி, ஆஷாடபூதி என்றும் சொல்லுவாள். பெரியோரையாவது குருமாரையாவது மதிக்கிறசுபாவம் கிடையாது. என்றைக்காவது புருஷன் அல்லதுமாமியாருடைய நிர்ப்பந்தத்தினால் சுவாமி தரிசனைக்காக கோவிலுக்குப்போனால் வீட்டிலுள்ளவர்களையும் வேலைக்காரரையும் பிராணவேதனைப் படுத்திவிடுவாள். கூந்தலைப்பின்னச்சொல்வதும் கண்ணாடியைப் பார்ப்பதும் அதுசரியாயில்லை இதுசரியாயில்லை என்று அவிழ்த்துப் போடுவதுமாயிருக்கும். அண்டைவீட்டுப் பெரியம்மாளை கூப்பிட்டு அம்மா இந்தவேலைக்காரநாய்களுக்கு என்கூந்தலைப்பின்னத்தெரியவில்லை தாங்களாவது சற்றே பின்னுங்களென்று கேட்பாள். அந்தம்மாள் வெகுகஷ்டத்தோடு பின்னிக்கட்டி விடுவார்கள். கமலம் கண்ணாடியை எடுத்துப்பார்த்து இதென்ன "கர்னாடகத்துப் பின்னல்" சற்றுலட்சணமாய் பின்னுங்களென்று மறுபடியும் கூந்தலை அவிழ்த்துவிடுவாள். பெரியம்மாள் திரும்பவும் பின்னுவார்கள். அவள் திரும்பவும் அவிழ்த்துப்போடுவாள். உன்மனம்போல் நீதான்பின்னிக்கொள் என்றுசொல்லிவிட்டு பெரியம்மாள் கோபமாய் போய்விடுவார்கள். கடைசியில் வேலைக்காரியிடம் ஒருமாதிரியாய் பின்னிக்கொண்டு தலையாபரணங்கள் ஒன்றும் தப்பவிடாமல்வைத்து முடித்து தன்நகைகளை எல்லாம் அழகாய் ஜோடித்து வைத்துக்கொள்ளுவாள். தனக்கிருக்கிற பட்டுகளிலெல்லாம் மெல்லியதும் அதிகபளபளப்பானதுமான ஒன்றை அணிந்துகொண்டு கழுத்துநகைகளும் வெளியில் தெரியத்தக்கதாய் போட்டுக்கொண்டு

கோயிலுக்குப் புறப்படுவாள். கோயிலுக்குப் போனாலோ ஆராதனையை கவனிக்கிறதில்லை. அங்குவந்திருக்கும் முக்கியமான ஸ்திரீகள் எல்லாருடைய நகைகளையும் வஸ்திரங்களையும் பார்க்கிறதுதான் வேலையாயிருப்பாள். கமலம் சுவாமிதரிசனைக்குப் போகிறதைவிட போகாமலிருத்தல் உத்தமமல்லவா? தன் ஆத்துமாவை கெடுக்கிறதுமல்லாமல் மற்றவர்களையும் ஆராதனையில் தங்கள்கவனத்தைச் செலுத்தவிடாமல் அம்மா அந்த நகை யெங்கேசெய்தீர்கள் எத்தனைபவுன் பிடித்தது என்றும் இந்தப்புடவை யார்கடையில் வாங்கினது எத்தனைமுழம் யென்ன விலையென்றும் அக்கா! இவ்வளவு அழகாய் உனக்குமுடி பின்னிவிட்டதாரென்றும் இப்படிப்பட்ட அநுசிதமான கேள்விகளைக்கேட்டு அவர்களுக்கும் நஷ்டம் வருவிப்பாள். கோயிலிலிருந்து திரும்பிவந்தாலும் நகைப்பேச்சும் உடைப்பேச்சும் முடிப்பேச்சுமேதவிர சுவாமிதரிசனத்தைக் குறித்தாவது ஆராதனையைக் குறித்தாவது ஒன்றும் பேசமாட்டாள்.

புருஷனுக்காவது மாமியாருக்காவது பெரியோர்களுக்காவது அடங்கி நடக்கமாட்டாள். இவள்பிறந்த ஊரிலும் இவள் அகராதியிலும் கீழ்ப்படிதல் என்பதேகிடையாது.

இப்படிப்பட்டவளால் வீட்டுக்காரியங்கள் நிர்வாகிக்க முடியுமா? சோம்பலுக்கு இவள் எப்போதும் உறைவிடம். இவளுக்காக இன்னொருவர் பல்விளக்கினாலும் சந்தோஷந்தான். வாழைப்பழமானாலும உரித்துவாயில் கொடுக்கச் சொல்லுவாள். நினைத்த வேளையெல்லாம் தாய்வீட்டுக்குப் போய்விடுவாள். ஒருவர்பேச்சையும் கேட்காத துஷ்டை; இப்படிப்பட்ட கோடரிக்காம்பை யார்தான் விரும்புவார்கள்? இவளைக்கலியாணம்செய்த நாள்முதல் முத்தையப்பிள்ளை பெருங்கவலையுற்று கருத்து உருக்குலைந்துபோனார்.

முத்தையப்பிள்ளை வீடு நாம்முன்சொன்னபடி மனப்பாக்கிய மென்பதேயில்லாமல் "மூத்தவள்" குடியிருப்பாயி விட்டது. ஐயோ! பாவம் தன்மனைவியை சீர்ப்படுத்த முத்தையப்பிள்ளை எத்தனையோ பிரயாசப்பட்டுப் பார்த்தார். அவரால் முடியவில்லை. ஒருநாள் அவர் கமலமிருந்த அறைக்குள்போய் அவள்முகத்தில் அன்பாய் ஒருமுத்தமிட்டு என்பிரிய மனைவியே! உன் அழகிய முகம் உன்பேருக்கு ஒத்திருக்கிறது என்றுசொல்லவும் கமலம் புன்னகையாய் அது நீங்கள்தான சொல்லுகிறீர்களோ எங்கள் ஊரில் சிறுபிராயமுதல் என்னைப் பார்த்தவர்களெல்லாரும் ரோசாவென்று சொல்லுகிறதுண்டே என்றாள். அதற்கு முத்தையப்பிள்ளை ஆம் அதுசரியானபேர்தான் உன்முகம் ரோசாபுஷ்பம்போல்தான்

இருக்கிறது யாதொரு குறையும் சொல்லமுடியாது; ஆனால் ரோசாவுக்குள்ள மற்றக்குணங்களும் உன்னிடத்தில் பூரணமாயுண்டென்று கண்ணை இமிட்டிக்கொண்டு சொன்னார்.

(இன்னும் வரும்.)

ஓர் மாது.

---

## நகை, உடை இரவலுக்குப் போதல்—ஓர் சம்வாதம்.

---

காமாட்சி என்பவளும், விசாலாட்சியென்பவளும் சிறுபிராயத்தில் ஓரேபாடசாலையில் படித்துக்கொண்டிருந்தார்கள். இருவருக்கும் வயதுவந்து மணம்புரிந்து வாழ்வுற்றனர். சிலகாலஞ்சென்றபிறகு விசாலாட்சி மிக்கவறுமையடைந்தனள். சிலருக்கு வறுமைவந்தகாலத்தில், செல்வர்களைப் பின்தொடர்ந்து, அவர்கட்கிச்சகம் பேசி, சொல்லுவதற்கெல்லாம் ஆம் அதுவே சரி என்று தாளம்போடுவது வழக்கமேனும், விசாலாட்சியும் தன்கணவனும் வறுமையால் நேர்ந்த சிறுமையையும் பெருமையாய்ப் பாவித்து பட்டினியிருந்து இறக்கினும், செல்வத்தால் கர்வமுற்றுள்ளாரிடம் சார்ந்துவாழவிரும்பாதாராயிருந்தார்கள். 'செல்வம் சகடக்கால் போல்வரும்' அல்லவா? இவ்விதஞ்சிலநாள் கழிந்தபின், ஒருநாள், ஒருலாட்டரி சீட்டிற்கு அவர்கள் 1-ரூபாய் கட்டியதனால், இவர்களுக்கு முதல்ப்ரைஸ் ரூபாய் பதினாயிரம் வந்ததாக சமாசாரம் வந்தது. அதையுங் கவனியாதிருக்க, மறுநாள் விசாலாட்சியின் கணவனுக்கு வந்த 'சுதேசமித்திரன' பத்திரிகையில், தங்களிடமிருந்த நெம்பராகிய '0086' முதல்ப்ரைஸாகக் குறிக்கப்பட்டிருந்தது. எவ்வளவு சாந்தமுள்ளவர்களுக்கும் பணமென்றால் சந்தோஷந்தான். வறுமையிலுள்ளோர்க்குக் கொஞ்சசந்தோஷமாவுண்டாகும். அதிலும் தம்வறுமையால் பிறரைக் கேட்காத விரதங்கொண்டார் களிகொள்ளல் இயல்பே. வெளிக்குக் காட்டாவிடினும், தங்களுக்குள் உவகைகொண்டார்கள். போங்காலத்தில் எல்லாம் ஒன்றன்பின் ஒன்று போவதுபோல், வருங்காலத்தில் ஒன்றன்பின் ஒன்றுவந்து சேருமல்லவா? மிக்க கோடீசுவரியாய்விட்டாள் விசாலாட்சி எனினும் தான் வறுமையால் மெலிந்தவளானபடியால், வறுமையின் கொடுமையுணர்ந்து, வறுமையிலிருப்பவர்கட்கு எல்லாவிதத்தும் தன்னாலியன்றவுதவியை குறிப்பறிந்து கொடுத்துவந்தனள்.

இவள் வறுமையிலிருந்தகாலத்து மதியாதிருந்த காமாட்சியின் தங்கைக்குக் கல்யாணம்வர, தனக்குநல்ல ஆடையாபரணம் இல்லாமையால், தான் நெடுநாள் மறந்தும், பால்யத்தில் மிகவும் சிநேகிதங்கொண்டிருந்த விசாலாட்சி ஞ்யாபகம் வந்தது. உடனே, தன்கணவன்வருமளவும் தாமதியாது, விசாலாட்சிவீட்டிற்குச்சென்றனள்.

இருவரும் ஒருவருக்கொருவர் க்ஷேமம் விசாரித்து பேசிக்கொண்டிருக்கையில், அடியிற்குறித்த தர்க்கம் நிகழ்ந்தது.

காமாட்சி. விசாலாட்சி, உன்னிடத்தில் ஒருகாரியமாய் வந்தேன். என் தங்கச்சிக்கி கல்யாணம் ஒண நகை குடுக்குறையா.

விசாலாட்சி. நான் உனக்குஇரவல்தரமாட்டேன்.

கா. நீ, யாரு என்னகேட்டாலும் இல்லையென்று சொல்லாது குடுக்கிற வழக்கமென்று கேள்விப்பட்டேன். இல்லாவிட்டால் ஏன்வருகிறேன். நான் போகிறேன். (எழுந்தாள்)

வி. ஒருவர் சொல்ல கேள்விப்படலெல்லாம் உண்மையாகாது. நீ கோபங்கொள்ளாது உட்கார், போகலாம். (உட்கார்ந்தாள்)

கா. என்னமோ நாம் குழந்தையிலே இருந்து ஒன்றாச்சே, நீ குடுப்பாய் என்று பார்த்தேன்.

வி. அக்கா.

கா. வாயாலே அக்கா தங்கச்சி எல்லாந்தான்.

வி. அக்காள், நீ இவ்வளவுகோபங் கொள்ளக்கூடாது.

கா. யாருநகை. எனக்கேங்கோவம்.

வி. அக்காள். யாராவது ஏதாவதுகேட்கின், இல்லையென்றாது இயன்றதைக் கொடுப்பது உண்மையே. உனக்கும் தேவையானதைத்தர என்றால் கூடுமானால் தடையில்லை. நீ என்னுயிர்க்கொப்பான சிநேகியானதால், உனக்கு இரவல் கொடுக்கமாட்டேனென்றேன்.

கா. ஆகா! நன்றாய்ச்சொன்னாய். யாராவது நீ சொன்னதைக் கேட்டால், சிரிப்பார்களே.

வி. அக்காள், நீ இப்படி யோசியாது வார்த்தையாடுவது எனக்கு வருத்தத்தையுண்டுபண்ணுகிறது. நம்முடைய உபாத்தியாயர், 'எந்த விஷயமாவது யாராவது கூறின், அதைக்கேட்டு காரணந்தெரிந்து கொள்ளாமல் வார்த்தையாடுவது தக்கதல்ல' என்றுபன்முறை கூறியதை மறந்தாயோ?

கா. என்னவோ சும்மாபேசுகிறாய், சொல்லேன் உன் ஞாயம் பார்ப்போம். தெரியாதவர்கள் கேட்டால் கொடுக்கிறது, தெரிந்தவர்கேட்டால் இல்லையென்பது ஞாயந்தானே. (இத்தருணத்தில் காமாட்சிக்குக் கோபமூள.)

வி. அக்காள், கோபம்வேண்டாம். என்னைத்தவிர மற்றயாரும் நகை படைக்கவில்லையென்று சொன்னேனா இல்லை, இந்நகை எனக்குத்தான் சாசுவதமா. யாருக்கும் நல்லகாலம் வருவதுமுண்டு. என்ன பயித்தியக்காரியாயிருக்கிறாயே.

கா. ஏது, வாய் கொழுத்துப் பேசாதே.

வீ. (நமஸ்காரஞ்செய்து) மன்னிக்கவேண்டும் அக்காள். இதோவந்தேன் (உட்சென்று விசாலாட்சி நகை பெட்டியைக் கொண்டுவந்து எதிரே வைத்து) அக்காள் இதோதருகிறேன். கொஞ்சங் கோபியாதிரு. உன் அத்தான் அவர்கள் வந்தவுடன் கேட்டுத்தருகிறேன். நீ உட்கார்.

கா. மின்னையே குடுத்தா இவ்வளவு பேச்சேன்.

வி. உட்கார் நான்சொல்வதைக் கவனி. நீ என் அத்யந்ததோழியானபடியால் உனக்குச் சொல்லும்படி ஆரம்பித்தேன், எனக்குத்தெரிந்த இரண்டொரு விஷயங்களைக் கூறுகிறேன் தயவுசெய்து கேட்கவேண்டும்.

கா. ஆகா, சொல்லம்மா. நீ சொல்லாது யார்சொல்வது? சொல்வதெல்லாஞ் சொல்லு. நகைகொடுத்து காப்பாத்தினையே அதுபோதும். நீ சொல்வதெல்லாஞ் சொல்.

வி. கோமணியானாலும், தன்னுடையதை யணிந்துகொள்வதேசிறப்பு. கூழாயினும், தன்கணவன் சம்பாத்யமே இனியது. கந்தையாயினும், பிறரிட மேற்காது, தைத்துடுப்பதே சிலாக்யம்.

கா. நல்லது.

வி. இரவல் சதமா அக்காள்?

கா. நல்லநகை நம்மிடத்திலே யில்லாவிட்டால், இருக்குறவரிடத்திலே வாங்கி ரெண்டுநாளைக்குப் போட்டுக்கொண்டால் ஆசைதீரும். மேலும் இரவலாவது மாட்டிக்கொண்டு போனால்தானடி மரியாதை பண்ணுவாள்.

வி. நம்தன்மைக்கன்றி, நம் நகைக்காக மரியாதைசெய்யும் மதியிலார்வீட்டிற்குப் போவதைவிட, நாம் எங்கும்போகாது நம்வீட்டிலேயே யிருப்பது சிறப்பு.

கா. இல்லை. நாலுபேர் வருவதாச்சே, அங்கே எல்லாம் நகையில்லாதிருக்கலாமா. தங்கச்சி ஆம்படயான் பார்த்தால் என்ன சொல்வார் விசாலாட்சி நமதுவீட்டிலே, நம்புருஷர் பார்க்கிறார், எப்படியிருந்தாலும் பரவாயில்லை. அங்கேயெல்லாம் அப்படி யிருக்கலாமா. (விசாலாட்சி மனந்துடித்தது.)

வி. சிவ சிவ. நீ சொன்னது ஈயத்தைக்காய்த்து காதில் ஊற்றியதுபோல் பாய்ந்தது. இவ்வுலகத்தில் பருஷனழகையும் அலங்காரத்தையும் மனைவியும், மனைவியின் அழகையும் அலங்காரத்தையும் புருஷனும் அன்றிமற்றவர் பார்த்தானந்தித்தல் அநாவசியகமுமன்றி அநீதி. பெண்பிள்ளைகள் தங்கள் கணவன்முன் அலங்கிருதத்தோடிராவிட்டாலும் அந்நியபுருஷர்களுக்குமுன் சிங்காரமாய் இரவல் நகையாவதணிந்து போகவேண்டுமென்பது புதுமை. மாதர்கள், தங்கணவரோ யிச்சைகொள்ள நடத்தல்வேண்டும். பிறர்மனதைத் திருப்திசெய்வது தாசிகள் கடன். குலமாதர்க்கடுத்ததன்று. புருஷன் வெளியே சென்றபின் அலங்காரஞ்செய்துகொண்டு பிறர்மதிக்க நடப்பவர்களும் உளர். நீ அப்படியிராதவளான படியால்தான் உனக்கு இவ்வளவு சொல்வது. மேலும் நாம் இரவல் வாங்கிப்போனால், அது, நம்கிரகசாரம் போதாது கைவிட்டுப்போனால் என்ன செய்வது. நல்லஸ்திதியிலிருப்பவர்கள் உண்மையில் மோசஞ்செய்துவிட்டு, போக்கடிந்ததென்றாலும் நம்புவார்கள். நம்போன்றவர்கள் உண்மையில் போக்கடித்தாலும், நாம் எடுத்துக்கொண்டோமென்பார்களே யல்லாமல், போக்கடிந்ததென்றால் நம்பார்கள். இன்னுமித்யாதி அநேககாரணங்களை முன்னிட்டு யோசிக்கின், இரவல் வாங்குவதே தீதெனவிளங்கும்.

இப்படி பேசிக்கொண்டிருக்கையில் வீட்டுக்காரர்வர, எல்லாம் எழுந்து சென்றார்கள்.

(இன்னும் வரும்)

பொ. மங்கையர்க்கரசி யம்மாள்.

## நீதிக்கதைகள்

### ஓநாயும் ஆட்டுக்குட்டியும்.

ஒரு ஆட்டுக்குட்டி ஒருநாள் காட்டில்மேய்ந்து கொண்டிருந்தது. வெயில் அதிகமாகவே தாகமுண்டாயிற்று. தனது தாகத்தைத் தீர்த்துக் கொள்ள ஓர்நீர் அருவியை நோக்கிச்சென்றது. அருவியின் அருகில் ஆட்டுக்குட்டி சென்ற அதேசமயத்தில் ஒரு ஓநாயும் நீர்குடிக்க அந்த அருவிக்கே வந்தது. சற்று தாகத்தைத்தீர்த்துக்கொண்டபின் ஓநாய் தூரத்தில் நின்ற ஆட்டுக்குட்டியை நோக்கி “அடேபயலே! ஏனடா தண்ணீரைக் கலக்குகிறாய்? நீர் சேறாய் குடிக்கப் பயன்படாததாயிற்று. அதனால் எனக்குண்டான நஷ்டத்திற்கு நீயே உத்திரவாதம் செய்யவேண்டும். உன்னை நாமொருபொழுதும் சும்மாவிடேன்” என்று கோபத்துடன் சொல்ல, ஆடு இப்பெரும்பழியைக் கேட்டுபயந்து நடுநடுங்கி மெல்ல மெல்ல ‘என் அய்யனே! நான் எப்படிக்கலக்குவது? நீர்குடித்துவிட்ட தண்ணீரல்லவா எனக்குவருகிறது. நான்குடித்துவிட்ட தண்ணீர் உமக்கெப்படி வரும்? அருவி உம்மிடமிருந்து என்னைநோக்கி வருகிறதென்பது உமக்குத் தெரியாதிருக்குமா? நீரைத் தாம்குடியாதபடி கலக்குவது என்றால் எப்படியாகும்?’ என்றது. அதற்கு ஓநாய் ‘சரி நீ சொல்லுகிறபடியே யிருக்கட்டும் என்றாலும் நீ துஷ்டன் ஆறுமாதத்திற்குமுன் என்னைப்பற்றிப் பேசாதவார்த்தைகள் பேசி தூஷித்தாயாமே?’ என, ஆடு ‘அய்யோ! சத்தியமாய்ச் சொல்லுகிறேன், ஆறுமாதத்திற்குமுன் நான்பிறக்கவேயில்லையே. நானெப்படி உம்மை வைதிருக்கக்கூடும்’ என்றது. இவ்வாறெல்லாம் குற்றம்சாட்ட முயன்றும் முடியாமல் கோபத்தால் கண் சிவந்து, உதடு துடிக்க வாயில்நுரையுடன் ஓநாய் ஆட்டைநோக்கி ‘பயலே! நீயில்லையென்றால் உதைப்பனுக்கும், யாரென்றால் என்ன’? என்று சொல்லி ஆட்டுக்குட்டியைப் பிடித்து சின்னபின்னமாகத் துண்டித்து வயிறாறப்புசித்தது. நீதி: ஆகையால், சிறுமிகளே! தீங்குசெய்ய நினைத்தால் துஷ்டனுக்கு முகாந்தரம் ஏதாவது அகப்படும்.

---

## சுகாதாரம்


### காற்றிலிருக்கும் அசுத்தங்கள்.

முன்சஞ்சிகையில் காற்று மலினப்படுவதற்கு அனேக காரணங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஷை காரணங்களாலுண்டாகும் அசுத்தங்களை ஒருமித்துப் பார்த்தால் சில (1) காற்றில் ஊசலாடிக்கொண்டு இருப்பவை

களாகவும் சில (2) காற்றோடு காற்றாய் நல்லஜலத்துடன் உப்புஜலம் கலந்ததுபோல ஒருமித்து இருக்கின்றவைகளாகவும் இருக்கின்றன.

முதல் வகுப்பிலுள்ளவைகளை வெளியில் பார்க்கவேண்டுமானால் ஓர் வீட்டின் கூரையில் ஒருசிறிய துவாரம், (hole) இருந்தால் அதன்வழியாய் வீட்டிற்குள் பிரவேசிக்கும் சூரியகிரணங்களைப் பார்த்தால் காற்றில் மிதந்துகொண்டிருக்கும் சிலதூசிகளைப் பார்க்கலாம். இதுநமக்கு சாதாரணமாய் வெளியில் தெரியக்கூடியது ஆனால் இதனால் அவ்வணுக்கள் இன்னது இன்னதுவென்று தெரிந்துகொள்ள முடியாது. இவைகளை விவரமாய் தெரிந்துகொள்வதற்கு அனேகவித உபாயங்கள் ரசாயன சாஸ்திரிகள் உபயோகிப்பதுண்டு. அவைகளில் சுலபமான ஒன்றை விவரித்து சொல்வோம். காற்றடக்கமான மூடியுள்ள ஒருசிறியதொட்டி ஒன்றைச் செய்து அதின் ஒருபக்கத்தில் மேல்புறத்தில் ஒருதுவாரமும் மற்றொரு பக்கத்தின் கீழ்புறத்தின் ஒருதுவாரமும்செய்து, (மேல்புறத்தில் இருக்கும் தொட்டிக்கு உள்புறத்தின் சமீபத்தில் இங்குபடத்தில் காட்டியிருக்கிறபடி) தொட்டிக்கு உள்புறத்தில்மேல்துவாரத்துக்கு எதிரில் ஒருகண்ணாடி துண்டை அமைத்து கீழ்புறமாய் இருக்கும் துவாரத்துக்கு தண்ணீர் குழாய்களுக்கு வைக்கப்படும் மரையைப்போன்ற ஓர்மரையை பொருந்தச்செய்து மேற்படி தொட்டியின் மேல்துவாரத்திற்கு ஓர் அங்குலம் குறைய ஜலம்விட்டு (கண்ணாடியில் ஜலம்படாமல்) கண்ணாடி துண்டின் மேல் கொஞ்சம் (Glycerine) கிளிசரீன் யென்னும் எண்ணையைத்தடவி, தொட்டியை மூடி தொட்டி அடியிலிருக்கும் மரையைதிருப்பி ஜலம் வெளியே ஓடும்படிசெய்தால் தொட்டியிலிருக்கும் ஜலம்கொஞ்சம் கொஞ்சமாய் குறையக்குறைய தொட்டிக்குள் மேல்துவாரம் வழியாய் காற்று பிரவேசிக்கும். அப்படி பிரவேசிக்கும்போது அந்த காற்று கிளிசரீன் யெண்ணை தடவிய கண்ணாடியின்பேரில் மோதும். அப்போது காற்றிலிருக்கும் தூசி அக்கண்ணாடியில் ஒட்டிக்கொள்ளும். இந்தக்கண்ணாடியையாவது இதன்மேல் தடவியிருக்கும் கிளிசரீனையாவது ஜாக்கிறதையாய்யெடுத்து பூதக்கண்ணாடியில் வைத்துப்பார்த்தால் காற்றில் இருக்கும் தூசியில் இன்னது இன்னது இருக்கிறதென்று தெரிந்துகொள்ளலாம்.

1. உள்ளே காற்றுசெல்வதற்கு வழி.
2. கண்ணாடித்துண்டு.
3. தண்ணீர் வெளியேவருவதற்கு வழி.




(இன்னும் வரும்)

டாக்டர். ஜே. வி. இராமசுவாமி நாயுடு, எல். எம். & எஸ்.

## காலக்ஷேபம்.

---

நமது வாழ்நாட்கள் சிறிதென்று முறையிடுகிறோமல்லவா? இன்னது செய்ய வேண்டுமென்று தெரியாமல் வீணாய்க் கழிக்குங்காலத்தை யோசிக்குமிடத்தில் நமது வாழ்நாட்களைப் பெரிதென்றே கொள்ளவேண்டும். யாதொன்றுஞ் செய்யாமலும், வீண்காரியங்களைச் செய்தும், நமது கடமையானவைகளைச் செய்யாமலு மிருந்துகொண்டு, வாழ்நாள் சிறிதென்று முறையிட்டபோதிலும், நமது செய்கைகளால் கோடிகால மிருப்பவர்கள்போல நடக்கிறோம். இவ்வாறே மனிதர்கள் சொல்வதொன்றும் செய்வது வேறுமாயிருக்கின்றது. வாழ்நாள் சிறிதென்று கவலையுற்றபோதிலும், காலத்தைப்போக்கி விடவும் விரும்புகிறோமல்லவா? ஒருவன் வாலிபனாயிருக்கும்போது சீக்கிரத்தில் மனிதனாகவும், மனிதனானபின்பு தொழிலிற்பிரவேசிக்கவும், பின்பு சம்பத்தையடையவும், அதன்பின்பு கௌரதைமுதலான மேன்பாட்டைப் பெறவும், இச்சுகங்களையெல்லா மனுபவித்தபின்மேல் இவைகளைவிட்டு நீங்கவும் விருப்பமுடையவனா யிருக்கிறான். வாழ்நாள் சிறிதெனக் கொள்ளப்பட்டிருப்பினும், அதன்பலபருவங்களி லொவ்வொன்றும் நீடித்திருப்பதாயும் ஓய்வற்றதாயுங் காணப்படுகின்றது. பொதுவில் மனிதர்கள் நெடுநாள் வாழ விருப்பமுடையவர்களாயினும் ஒவ்வொரு பருவமும் சீக்கிரத்தில் முடியவேண்டுமென்று இச்சிக்கிறார்கள். தங்களுக்குச்சேரவேண்டிய கடனுக்காக வியாச்சியஞ்செய்திருப்பவர்கள் விசாரணைகாலத்திற்கு முந்தியநாட்கள் சீக்கிரத்தில் போய்விடவேண்டுமென்று ஆவலுள்ளவர்களா யிருக்கிறார்கள். மணம்புரிவோன் தன்மனையாளோடுசேர்ந்து வாழும்படி நியமிக்கப்பட்ட நாளுக்கு முந்தியநாட்கள் நொடியிற்போக வில்லையென்று சஞ்சலப்படுவான். காலம் எவ்வளவு சீக்கிரத்தில் போய்விட்டாலும் இன்னும் சீக்கிரத்தில் போய்விடாதாவென்று ஆத்திரப்படுகிறார்கள். இவ்வாறு சிலநாளைக்கழிக்கவிரும்புவதுபோல் அனேக வருஷங்களையும் போக்கவிரும்புவோம். பாலைவனத்தில்செல்லு மொருவன் அதைவிட்டுநீங்கி மருதநிலத்திற் செல்லவிரும்புவதுபோல, தனக்குச் சுகங்கிடைப்பதாய்த் தோன்றுங்காலத்திற்கு முந்தியநாட்களைக் கழிக்க விரும்புகிறோம்.

ஒருவனுடைய ஆயுள்நாளை இருபது பங்காகப்பிரித்தால் அதில் பத்தொன்பது பங்கும் யாதொன்றுஞ் செய்யாமல் அல்லது சுகமேயில்லாமற் போக்கியதாய்க் காணப்படும். இதுகாலத்தைக்கிரமமாய்ப் போக்காதவர்களைப் பற்றியேயல்லாமல், காலத்தினுபயோகத்தை யறிந்து யாதேனுமோர்தொழிலில் கையிட்டிருப்பவர்கள் விஷயத்திலல்ல. வீணில் காலங்கழிப்பவர்கள், அப்படிச்செய்யாமல் காலத்தைக் கிரமமாய்ப்போக்கும்படி அடியில்சொல்லப்பட்ட மார்க்கங்களை உபயோகிப்பார்களென்று நம்புகிறோம். யாவராலும் நன்மையென்று கொள்ளப்பட்ட நற்செய்கைகளைச்செய்தலும் ஜனங்களின் ஐக்கியவாழ்க்கைக் கேதுவானவைகளைச் செய்தலும், காலங்கழிப்பதற்குள்ள பலமார்க்கங்களுள் ளுஞ்சிறந்தவை. மூடர்களுக்குப்புத்திசொல்லி திருத்துதல், வறியவர்களுக் குதவிசெய்தல், துன்பமுற்றவர்களைத் தேறுதலைசெய்தல், இன்னுமிவைபோன்றவைகள் இஷ்டமுள்ள யாவரும் செய்யவேண்டிய கடமைகள். மூர்க்கரைச் சாந்தப்படுத்துவதும், பாத்திரமறிந்துதவி செய்வதும், பொறுமைகுண முடையவர்களை யதினின்றுமாற்றுவதும் கோபியைக் கோபத்தினின்றுத் தணிப்ப

தும், துராபிமான முள்ளவர்களைத் திருத்துவதும், விவேகத்திற் கடுத்தவைகளாயிருப்பதுமன்றி, இவைகளைபுத்தியோடு செய்துவருபவர்களுக்குத் திருப்தியை யுண்டுபண்ணத் தக்கவைகளாயிருக்கின்றன. பேச்சுத்துணையின்றித் தனித்திருக்குங் காலத்திலுஞ் செய்யக்கூடிய தொன்றுண்டு. அதாவது நம்மைப்படைத்த கடவுளுக்குத் துதிசெலுத்துதல். கடவுளெங்கும் வியாபித்து நமது செய்கைகளையும் நினைவுகளையு மறிகிறாரென்பதை எப்போதும் மனதிலெண்ணி நடப்பவர்கள் மனமகிழ்ச்சியுடையவர்களா யிருப்பதுமன்றி, உயிருக்குயிரான சினேகிதரிலுஞ் சிறந்தவராகிய கடவுளோடு கூடியிருப்பதாகிய ஆனந்தத்தில் மூழ்கியிருப்பார்கள். இவ்வாறு நடப்பவர்களுக்குக் காலம்போக்க வருத்தந்தோன்றாது. தனித்திருக்குங் காலமுமில்லை. தெய்வபக்தி யில்லாதவர்கள் காலத்தைக்கழிக்க வழியில்லாமல் திகைத்திருக்கும்போது, தெய்வபக்தி யுள்ளவர்களோ அவஸ்தையின்றி, நல்லறம்பூண்டு வாழ்ந்திருப்பார்கள். மரண மடைந்தபின்பு தாங்கள் நாடியகடவுள் தங்களை கைவிடாரென்னும் நம்பிக்கையுடன் மறுமைப்பயனாகிய மோக்ஷத்தைநாடி அவர்கள் ஆத்துமா மகிழ்ச்சியடைந்திருக்கும்.

மனிதர் தாங்கள்செய்யும் நன்மைதீமைகளுக்கேற்ப மோக்ஷநரகங் கிடைக்குமென்பதைச் சிந்திக்குமளவில் இம்மையிலேயே காலத்தைச் சன்மார்க்கத்திற் போக்கவேண்டுமென்பது தானாய்விளங்கும். மனிதனுக்கு விதித்திருக்கும் சிறிதுநாட்களைப் போக்கத் தகுதியானவழி யேற்பட்டிருந்தும் அந்நாட்களில் பெரும்பங்கையொன்றுஞ் செய்யாமற்போக்கியும், யாதாவது செய்வதாகிய சிறிதுகாலத்தை துன்மார்க்கத்தில் போக்குகிறவர்களை யென்னென்று சொல்லுவோம். மனதை யொன்றிலேயே நிறுத்திவைப்பது மிகவும் கடினமாகையால் குற்றமற்ற விநோதங்களில் சிறிதுகாலம் போக்குவது அவசியந்தான். அப்படி செய்வதிலும் அதிக ஆனந்தத்தை யளிக்கும் நல்லசினேகரோடு சம்பாஷணைசெய்வதுமேலாம். சன்மார்க்கத்திலும் விவேகத்திலுஞ் சிறந்த நண்பருடன் கூடியிருப்பதிலுமதிக சந்தோஷத்தை யுண்டுபண்ணுவது, வேறொன்றில்லை. அவர்களுடைய நட்புமனக்கவலையை நீக்கி, அறிவைவிளக்கி, ஞானமூட்டி, சன்மார்க்கத்தில் புத்தியை நிலைநிறுத்தி, பொறாமை, ஆசை, கோபம், கடுஞ்சொல் முதலியவைகளைப்போக்கி, எக்காலத்திலுந் துணைநிற்கும். கல்வி விஷயத்தை இவ்விடத்திலெழுதப்புகில், அதுவிசேஷமாய் முடியுமாகையால் கல்வியும் காலங்கழிப்பதற்குள்ள மார்க்கங்களில் ஒன்றென்று குறிப்பாய்ச்சொல்லிமுடிக்கலாயிற்று.

(Adopted from Addison.)

---

ஐயா,

மேஸ்ரீ தத்திய மாதர் மனோரஞ்சினியின் முதல்கணக்குக்கு விடை :—3 - வது கோவிலுக்கு வரும்போது அரைப்படி இருக்கவேண்டும். 2 - வது கோவிலில் ஒன்றரைப்படியில் பாதியாகிய முக்கால்படி இருக்கவேண்டும். ஆகையால் முதல்கோவிலில் நைவேதனம் செய்ததுள்பட ஒன்றேமுக்கால்படிக்கு பாதியாகிய முக்காலே அரைக்கால்படி அல்லது 7 ஆழாக்கு ஆதியில் இருந்திருக்கவேண்டும்

பவானி அம்மாள்.

மேஸ்ரீ தத்திய முதல்கணக்குக்கு செகண்டிராபாத்திலுள்ள சாவித்திரிபாய் என்ற பெண்மணியும் இதேவிடை அனுப்பியிருக்கிறார். இவ்விதமே நமது பெண்மணிகள் தங்களுக்குத் தெரிந்த கழக்கோடி, சோகி, அம்மானை, முதலிய விளையாட்டுப்பாட்டுகள், விடுகதைகள், கணக்குகள், முதலியவைகளை அடிக்கடி எழுதி அனுப்புவார்களென நம்புகிறோம். [ப - ர்.]